


**NIIT** வழங்கும் இன்டர்நெட் பிட்ஸ்

## • ஒரு விநோதமான மியூஸியம்!



சென்ற ஆண்டு நீங்கள் சாப்பிட்ட 1200-வது சாப்பாட்டு அயிட்டம் என்னவென்று உங்களால் நினைவுபடுத்தி சொல்ல முடியுமா? எல்லீ ஹாரிசன் என்ற பெண்ணைக் கேளுங்கள். புகைப்பட ஆதாரமே காட்டுவார் (பார்க்க: எதிர்ப்பக்கம்). இந்த இருபத்துநான்கு வயசு பட்டதாரிக்கு 22-வது பிறந்த நாளன்று ஒரு விநோத

மகா

உலகே உலகே உடனே வா



பார்க்க.. ரசிக்க!

**NIIT**







**NIIT**

லட்சியம் பிறந்தது – 'இனி எந்த உணவைச் சாப்பிடுவதாக இருந்தாலும் முதலில் அதை புகைப்படம் எடுத்து நெட்டில் பிரசுரிக்க வேண்டும்'. அந்த நொடியிலிருந்து இன்று வரை அவரது வயிற்றை நிரப்பிய உணவுகளை எல்லாம் 'நெட்'டில் புகைப்படங்களாக நிரப்பிக் கொண்டிருக்கிறார். "இதை ஒரு புராஜக்டாகவோ அல்லது எனது விசித்திரமான டைரியாகவோ ஏன், என்னையே ஒரு பைத்தியமாகக் கூட நினைத்துக் கொள்ளுங்கள். எனக்கு அதுபற்றி கவலை இல்லை. இது எனக்குப் பிடித்திருக்கிறது. அவ்வளவுதான்!'' என்று தன்போக்கில் பேசுகிறார் எல்லீ. www.ellieharrison.comதான் அவரது வெப்சைட் முகவரி. போய்ப் பாருங்கள்... ஒரு வித்தியாசமான மியூஸியத்துக்குச் சென்று வந்த உண(ர்)வை அனுபவிப்பீர்கள்.




**எலும்புலக எக்ஸ்–ரே!**

### நெட் ஜோக்




சர்தார்ஜி தனது செல்ல நாய்க்குட்டியுடன் செஸ் விளையாடிக் கொண்டிருந்ததைக் கண்டு அவரது நண்பருக்கு ஆச்சரியம். ''வாவ்... உங்களோட நாய்க்குட்டி அவ்வளவு புத்திசாலியா?'' என்றார் கண்களை அகல விரித்தபடி.

சர்தார்ஜி சொன்னார் – ''ம்... நீங்கதான் மெச்சிக்கணும். இதுவரைக்கும் ரெண்டு தடவை என்கிட்ட தோத்திருக்கு.''

(வலை இன்னும் விரியும்)